

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (22.5.2023) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் கழிவுநீர்த் தொட்டிகள் மற்றும் பாதாளச் சாக்கடைகளில் ஏற்படும் இறப்புகளை தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் பி. செந்தில்குமார், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கிர்லோஷ் குமார், பேரூராட்சிகளின் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பா. பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.5.2023) முகாம் அலுவலகத்தில், திருநெல்வேலி மத்திய மாவட்டக் கழகச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள டி.பி.எம்.மைதீன்கான் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், திருநெல்வேலி மாநகர கழகச் செயலாளர் சுப்பிரமணியன், மாநகர மேயர் பி.எம். சரவணன், வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

## சென்னை பள்ளி ஆசிரியர்கள் - மாணவர்களுக்குப் பாராட்டு!

சென்னை,மே.24 -

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின்கீழ் இயங்கும் சென்னை பள்ளிகளில் பயின்று 10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் சிறப்பிடம் பெற்ற புல்லா அவென்யூ, மார்கெட் சாலை, பந்தர் கார்டன், கோயம்பேடு, மடுவின்கரை, வேளச்சேரி, திருவான்மியூர் மற்றும் கொளத்தூர் ஆகிய சென்னை பள்ளிகளைச் சார்ந்த வி.கீர்த்தனா, எம்.பர்ஹானா, எச்.திராஜ், ஜெவிஷ்வா, எஸ்.மணிகண்டன், எஸ்.குமரவேல், எ.தருனா, முத்துலட்சுமி, எ.ஸ்வேதா, ஆர்.ஜெயபிரியா மற்றும் ஜி.ஹரிஷ் ஆகியோரையும், 11 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் சிறப்பிடம் பெற்ற வேளச்சேரி, புத்தா தெரு, புல்லா அவென்யூ, எம்.எச்.சாலை, விருகம்பாக்கம், சைதாபேட்டை, கொளத்தூர் மற்றும் தரமணி ஆகிய சென்னை பள்ளிகளைச் சார்ந்த ஆர்.சித்ரா, எம்.மகேஸ்வரி, எம்.ஸ்வேதா, பி.ஹரிணி பிரியா, வி.திவ்யாஸ்ரீ, எம். பெமின் ஆம்ரா, ஜெ.நேகர்ரீ, கே.,ப்ரீத்தி, எஸ்.ஷாருக் மற்றும் கே.மேனகா ஆகியோரையும் மேயர் திருமதி ஆர்.பிரியா பாராட்டி பரிசுகளை வழங்கினார்.



மன்னர் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையரின் 1348 வது சதய விழாவை முன்னிட்டு ஒத்தக்கடையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார் தலைமையில், தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவி.வீ.மெய்யநாதன் முன்னிலையில், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் பழனியாண்டி, காடுவெட்டி தியாகராஜன் , சௌந்தரபாண்டியன் மற்றும் மாநகர மேயர் அன்பழகன் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் பெரியசாமி மாவட்ட ஊராட்சி தலைவர் தர்மன் ராஜேந்திரன் ,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், கருணை ராஜா பகுதி செயலாளர்கள் போட்டோ கமால், மோகன்தாஸ், ராம்குமார் மற்றும் குமரவேல் ராஜேந்திரன், அம்பிகாவதி கை குடி சாமி உள்ளிட்ட கோட்ட தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

### அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தலைமை! ஒன்றியச் செயலாளர்கள்

# லெ.மு.ரவிச்சந்திரன் - ஆர்.ஜி.சுப்பிரமணியன் இல்லத் திருமணங்கள்! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைக்கிறார்!

### எஸ்.ரகுபதி, மா.சுப்பிரமணியன், செந்தில்பாலாஜி, அன்பில் மகேஷ்பொய்யா மொழி, சிவ.வீ.மெய்யநாதன், குன்றக்குடி அடிகளார் பங்கேற்பு!

சிவகங்கை. மே 24 -

கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் வருகிற 25ம்தேதி வியாழக் கிழமை சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அன்றைய தினம் இரண்டு ஒன்றிய செயலாளர்களின் மகள்கள் திருமணத்தை நடத்தி வைக்கிறார்.

அவரது நிகழ்ச்சிகள் வருமாறு.

காரைக்குடி. சிவகங்கை மாவட்டம் கண்ணன்குடி ஒன்றிய கழக செயலாளர் லெ.மு.ரவிச்சந்திரன் - திருமதி ர.சௌந்தரி ஆகியோர் மகள் பொறியாளர் ர..சிவசக்தி முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் திருப்பத்தூர் காரையூர் இரா.செழியன் - திருமதி மல்லிகா மகன் பொறியாளர் செ. தமிழ்வாணன் ஆகியோரது திருமணம் நாளை ( 25.5.2023 - வியாழக் கிழமை காலை 9மணியிலிருந்து 10 மணிக்குள் காரைக்குடி கிரிஷ் மகாலில் சிவகங்கை மாவட்டகழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் திருமணத்தை நடத்தி வைத்து சிறப்புரையாற்று கிறார்.

நிகழ்ச்சிக்கு அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, மா.சுப்பிரமணியன், வி.செந்தில்பாலாஜி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, முன்னாள் எம்.எல்.ஏ. கேஆர். ராமசாமி ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. மற்றும் கழக நிர்வாகிகள் அனைத்து கட்சிப் பிரமுகர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசுகிறார்கள். முன்னதாக முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

மணவிழா ஏற்பாடுகளை கண்ணன்குடி ஒன்றிய கழக செயலாளர் லெ.மு.ரவிச்சந்திரன் திருமதி ர.சௌந்தரி ர.முத்துராமலிங்கம் திருமதி மல்லிகாசெழியன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் செ.தமிழ் நம்பி திருமதி வைஷாலி ஆகியோர் செய்து வருகிறார்கள்.

குன்றக்குடி. கல்லல் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் குன்னக்குடி ஆர்.ஜி. சுப்பிரமணியன் எஸ்.லதா ஆகியோரின் மகள் சு.கிருஷ்ண வேணி மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுகா பெருமங்கலம்கிராமத்தைச் சேர்ந்தவரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான இராம.இளங்கோவன் திருமதி.ராதிகா ஆகியோரின் மகன் இள. பவித்ரன் ஆகியோரது திருமணம் 25.5.2023 வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு மேல் 12 மணிக்குள் குன்றக்குடி காரைக்குடி மெயின் ரோட்டில் உள்ள செல்வகுமார் பாம்ஸ் மகாலில் நடைபெறுகிறது. திருமணத்தினை கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரு மான உதயநிதி ஸ்டாலின் தலைமை ஏற்று திருமணத்தை நடத்தி வைத்து சிறப்புரை யாற்றுகிறார்.

சிவகங்கை மாவட்ட செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே. ஆர்.பெரியகருப்பன் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். மணமக்களை அமைச்சர்கள் எஸ்.ரகுபதி மா.சுப்பிரமணியன், வி.செந்தில் பாலாஜி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிவ.வீ.மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் அனைத்து கட்சி பிரமுகர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசுகிறார்கள். முன்னதாக கல்லல் மேற்கு ஒன்றிய செயலாளர் குன்னக்குடி சுப்பிரமணியன் வரவேற்றுப் பேசுகிறார். தலைமைச் செயற்குழு உறுப்பினர் இராம. இளங்கோவன் நன்றியுரை ஆற்றுகிறார். மணவிழா ஏற்பாடுகளை ஆர். ஜி.கண்ணன், சோலை, குன்னக்குடி சுப்பிரமணியன் திருமதி லதா, ஆர்.ஜி. சரவணன், திருமதி புனிதா, சு. மணிகண்டன், இராம. இளங்கோவன், திருமதி. ராதிகா, இராம.வைத்தியநாதன், திருமதி கவிதா, இராம. முத்துக்குமரன் சாந்தி, சீ.சதிஸ்குமார் நந்தினி, வை.மணிகண்டகுரு ஆகியோர் செய்து வருகிறார்கள்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (22.05.2023) சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் தலைமையில், ஹஜ் புனிதபயணம் மேற்கொள்ளும் ஹஜ் பயணிகளுக்கான வழிகாட்டி நெறிமுறைகள் குறித்து தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் முதல் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முகமது நசிமுத்தின், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு சிறப்புச் செயலாளர் ஹனீஷ் சாப்ரா, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுத் தலைவர் அப்துல் ஜப்பார், பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு மண்டல துணை ஆணையர் எம்.சிவகுரு பிரபாகரன், விமான நிலைய அலுவலர்கள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

# தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் தீர்மானங்களை விளக்கி சிறப்புரை!

தஞ்சாவூர் மே.24 -

தஞ்சாவூர் மத்திய மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம், தஞ்சை பிரகதமணி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்டக் கழக அவைத்தலைவர் சி. இறைவன் தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி. கே.ஜி.நீலமேகம் எம். எல்.ஏ, து.செல்வம், எம். இராமசந்திரன், கே.டி. மகேஷ்கிருஷ்ணசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம். எல்.ஏ கூட்டதின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர்கள் அக்ரி கணேசன், இரா.சங்கர், வீர.கணேசன் மற்றும் மாநிலக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஜுன் மாதம் முழுவதும் ஆதரவற்ற முதியோர் மற்றும் மாணவ, மாணவியர் விடுதிகளில் அறுசுவை உணவு வழங்குதல். அனைத்து வார்டுகள் மற்றும் கிளை கழகங்களில் கொடியேற்றி இனிப்பு வழங்கி சிறப்பாக கொண்டாடுவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

ஜீன் 3 தஞ்சை மத்திய மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், கிளை கழகங்களில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட இக்கூட்டம் தீர்மா னிக்கிறது.

2023 ஜுன் 3, ஜுன் 5 ல் சென்னையில் அகில இந்திய தலைவர்கள் பங்கேற்கும் மாபெரும் கூட்டத்தில் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பிப்பது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

2023 ஜீன் 20 திருவாரூரில் நவீன தமிழகத்தின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் கோட்டம் திறப்பு விழாவில் மாநகரம், ஒன்றியம் மற்றும் பேரூர் கழகங்கள் சார்பில் 500 மேற்பட்ட வானகங்களில் கலந்து கொள்வது என இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

உடன் பிறப்புகளாய் இணைவோம் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் கழக பவள விழா ஆண்டினை முன்னிட்டு தஞ்சை மத்திய மாவட்ட கழகத்தின் சார்பில் இன்று வரை 65,000 உறுப்பினர்கள் சேர்த்த நிலையில் மீதமுள்ள 85,000 உறுப்பினர்களை விரைவாக புதிய உறுப்பினர்களை சேர்ப்பது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

ஒரத்தநாடு வட்டம் வடசேரி மற்றும் பூதலூர் வட்டம் மைக்கேல்பட்டியில் தமிழ்நாடு அரசின் அனுமதியின்றி நிலக்கரி சுரங்கம் அமைக்க ஏலம் விட முயற்சியை மேற்கொண்ட ஒன்றிய அரசின் செயலினை தடுத்து நிறுத்தி ஏலத்தினை திரும்ப பெற செய்து விவசாயத்தையும், விவசாயிகளை காப்பாற்றிய தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

தஞ்சாவூரில் டைட்டல் பார்க்-க்கு அடிக்கல் நாட்டி தஞ்சை மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்கு வித்திட்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள் கிறது.

தமிழ்நாட்டின் கலாச்சாரம் பண்பாட்டின் சின்னமான ஜல்லிக்கட்டினை நிரந்தரமாக நடத்திட உச்ச நீதி மன்றத்தில் தீவிரமாய் வழக்கு நடத்தி வெற்றி பெற்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

16 இலட்சம் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படியை 38 சதவிகிதத்திலிருந்து 42 சதவிகிதமாக உயர்த்தி வழங்கிட உத்தர பிறப்பித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


GREATER CHENNAI CORPORATION
SPECIAL PROJECT DEPARTMENT

S.P.D.C.No.A1/0666-5/2023 **e-TENDER NOTICE**

e-Tenders are invited for the following works in Single Cover System as per details furnished below.

| Sl. No. | NIRBHAYA FUND - Development of Sports Training Grounds in GCC Schools |
|---|---|
| 1 | **S.P.D.C.No.A1/0666-5/2023 - Package V** - in Dn-128, Dn-133 & Dn-142, Zone-10, approximate value of work **Rs.106.87 lakhs** (Including GST) E.M.D. amount **Rs.1,07,000/-** |
| 2 | **S.P.D.C.No.A1/0666-6/2023 - Package VI** -in Dn-175 & Dn-182, Zone-13, approximate value of work **Rs.194.22 lakhs** (Including GST) E.M.D. amount **Rs.1,95,000/-** |

| | |
|---|---|
| Tender last date and time of submission | : upto **08.06.2023, 3.00 pm** |
| Bid document will be available in website | : **https://tntenders.gov.in** upto **08.06.2023, 3.00 pm** |
| Tender opening date and time | : **09.06.2023 at 3.00 p.m.** |

DIPR / 2688 / Tender / 2023 சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம் **Superintending Engineer /S.P**


## திருவொற்றியூரில் தெருமுனைக் கூட்டம்!

சென்னை, மே 24 -


சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் கழக இளைஞரணி செயலா ளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் திராவிட நாயகரின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனை கூட்டங்கள் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் முன்னிலையில் நடை பெற்றது.

இந்த கூட்டங்களில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை தலைமை கழக பேச்சாளர் ஒசூர். அப்துல் ரகுமான் பாரி சிறப்பாக எடுத்துரைத்தார் .

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம். எல்.ஏ., கே.பி. சங்கர் எம். எல்.ஏ., மாவட்ட பொருளாளர் எல்.ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் என்.திருசங்கு, இ.குமரவேல், யு.எஸ். குறளரசன், ஏ.இந்துமதி, எம். வஜ்ரவேல்,

மாவட்ட பிரதிநிதிகள் சந்திரகுமார், பொன்.கோ. விஜயன், ந. ராம்குமார், ,ஜி. தினேஷ், ஆர் மோகன சுந்தரம், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைப்பேட்டை ஒன்றியம், போடிபட்டி உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மன்றம் மற்றும் போடிபட்டி தி.மு.க. மீண்டும் 7 ஸ்டார் இணைந்து நடத்திய கபடி போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுக்கோப்பையை மாவட்டக் கழக செயலாளர், இல.பத்மநாபன் வழங்கினார். இதில் இரா.ஜெயராமகிருஷ்ணன், கே.செந்தில்குமார், செழியன், க.ஈஸ்வரசாமி, அனிதா செல்வராஜ், டி.சௌந்தர்ராஜன், எம்.விவேக், பாபு, சேகர் (எ) சந்திரசேகரன், கோபால், காமாட்சி அய்யாவு, ராமசாமி, உதயகுமார், எம்.முருகானந்தன், பி.எம்.கணேசன், தளபதி கணேசன், என்.ஜெயகணேஷ், சஞ்சய்காந்தி, ஆம்னி சரவணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குட்டப்பாளையம் மிசா கே.என்.சாமிநாதன்

### மே 24 (1986)



கொங்கு சீமையில் பாரம்பரியமிக்க செல்வாக்குள்ள குடும்பத்தில் பிறந்தவர் எனினும், சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு, திராவிடர் கழகத்தில் பணியாற்றி, கழகம் துவங்கியபோது தன்னையும் அதில் இணைத்துக் கொண்டு, கழகச் செயல் வீரர்களுடன் கொங்கு மண்டலத்தின் பட்டிதொட்டிகளுக்கெல்லாம் சென்று, பாமரனும் புரியும்படி நகைச்சுவையாக பேசி கழக கொள்கைகளை பரப்பியவர்.

1967ல் வெள்ளகோவில் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்றார்.

பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்தபோது, கால்நடை அபிவிருத்தி குழு உதவி தலைவராகவும் – தமிழ்நாடு தானிய சேமிப்பு கிடங்கு இயக்குநராகவும் – ஈரோடு மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநராகவும் – தாராபுரம் குளத்துப்பாளையம் கூட்டுறவு நூற்பு ஆலை தலைமை பொறுப்பு போன்ற பொறுப்பு வகித்து திறம்பட பணியாற்றியவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு கோவையில் சிறைவாசம் அனுபவித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் “கொங்கு நாட்டில் தலைதாழச் சிங்கமாக, தன்மான முரசாக தமிழ் இனத்துச் சுடரொளியாக வாழ்ந்த குட்டைப்பாளையத்தார்” என தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.